840

பால ஜோதி போதகர்

இரவு

O-,85MAA2,B
X1/4
171651

ஸ்ரீ

பாரிஜாதநாடகக்கும்மி.

இது

அம்புஜம்மாளால் இயற்றப்பெட்டு

வித்யாகல்பதரு அச்சுக்கூடத்தில்

...ிப்பிக்கப்பட்டது

...14

O, 85MA42, B
N14
171651

பாரிஜாத நாடகக்

கும்மி

(புதுக்கோட்டை நவராத்திரி கும்மி) இராகம்.

பாரிஜாதமென்னும் நாடகக்கும்மியைப் பாடலாம் வாராய் பெண்மயிலே

பாரிற்சிறந்த ஸ்ரீபாகவதத்திற் பாரிஜாதனுடகதைக் குமியாய்பாட

பக்தர்கள் கொண்டாடும் ஸாஸ்வதிதேவியே பாதத்திற் பணிந்தேன் கிருபைசெய்யவேணும்

அமரபுரிபோல் ஸொர்ணமாய் ஜொலித்திடும் அற்புததுவாரகா பட்டணந்தன்னில்

அஷ்டலெக்ஷிமியுடன் கிருஷ்ணனுங்கூடி ஆனந்தஸொரூபன் விளங்குகிறபொழுது

கனக்கமயாரதென் சிங்காரமாக கற்பகம்போலே விளங்குகிறதாம்

சிங்காரமானந்த ருக்மணிகிரஹந்தன்னில் ஸ்ரீ கிருஷ்ணனுங்கூட விருக்கிறபொழுது

நாடெங்குஞ்சஞ்சரித்து நன்மையையுரைத்திடும்

நாரதமஹா முனியவர் ஸ்வாமி

அந்தமுடன் வீணைகொண்டு வமுர்தஸாரமாய்ப் பாடி ஆண்டவனுடைய ஸந்நிதிவந்தார்

பச்சமாமலைபோன் மேனிஜொலித்திட பக்தசிகா மணி கோபாலகிருஷ்ணன்

சோடசவிதமகா வுபசாரஞ்செய்து ஸொர்ணமணி மய வாஸனம்போட்டார்

மனதிற்மகிழ்ந்து நாரதமகாமுனி மங்களமாக வா சிர்வதித்தார்

தேவலோக பாரிஜாதபுஷ்பத்தை தேவர்க்கே பிரி யமென்று ஸமர்ப்பித்தார்

மந்தகாஸமாக கொஞ்சரிப்புடனே மனதிற்மகிழ்ந்து கோபாலகிருஷ்ணன்

பாரியவள் ருக்மணி தேவிக்கிப்பிரியமென்று பாக் கியவசமென்று கைபெற்றுக்கொண்டார்

2. இராகம் நாதநாமக்கிரியை.

(முதுரைக்கினைபட்டோர்யெஜல்) என்ற இராகம்

தேவலோக பாரிஜாதபுஷ்பம் தேவமுனியாற் கொடுக்கப்பெற்று தேவிபவள் ருக்மணிகொண்டையி லழு காய் வஸுதேவபாலன் முடித்துவிட்டார்

கோபாலகிருஷ்ணன் ருக்மணிகொண்டையில் புஷ்

6-185 10172 B
N11

பத்தை முடித்தார்

சிங்காரலீலாவிநோதரெடி ஸ்ரீகளுக்குவெகுஜாலரெடி ஸௌந்தரிருக்மணி

கொண்டையிலழகாய் ஜோராகபுஷ்பத்தை முடித்தாரேடி

கோபாலகிருஷ்ணன் ருக்மணி கொண்டையிற் புஷ்பத்தை முடித்தார்

நீலக்கருங்குழலழகி நேர்த்தியுள்ள கொண்டையில் பிரீதியுடனே புஷ்பம்

முடித்து ஜெகஜோதிவடிவைக் கொண்டாடினர்

கோபாலகிருஷ்ணன் ருக்மணிகொண்டையில் புஷ்பத்தைமுடித்தார்

வாசனைபரிமளம்வீசும் நல்ல வாடாமல்லிகை பாரிஜாதம் வஞ்சையுடன்

ருக்மணிகொண்டையில் முடிக்க வந்தங்கெ நாரதர் பார்ந்து பிரமிக்க

கோபாலகிருஷ்ணன் ருக்மணிகொண்டையிலே புஷ்பத்தை முடித்தார்

3. இராகம் ஸௌராஷ்டகம்.

(திருவ்சரித்திரக் கும்மியில்) 6 வது இராகம்

கன்மெகிழ்ந்து நாரதரும் கலகம்செய்ய வேண்டு

வென்றே

நினைத்து ஸத்தியபாமை யந்தப்புரம் ஜடுதியில்வந்தங்கே சேர்ந்தார்

பொற்கொடிமானது ஸத்தியபாமை பூஜைகளைசெய்து மவள் வணங்கி

ஆசனங்கள் ஸமர்ப்பித்து வதிசயங்களுண்டோவென்று கேட்டாள்

அன்னனடை மாதரசே வதிசயத்தைக்கண்டு மிங்கேவந்தேன் குதூகலமாய் ருக்மணியுடன் கூடியிருந்தார் கண்ணனங்கேகண்டேன்

பரிமளங்கள் வீசும்நல்ல பாரிஜாதபுஷ்பங் கொண்டுபோய் கொடுத்தேன்

வாஞ்சையுடன் ருக்மணிக்கு வாரிக்கொண்டையில் முடித்தாரெடி கண்ணன்

பஞ்சபிராணனென்னிடத்தில் பக்ஷமுள்ளகண்ணனென்றுரைத்தாய்

உத்தமியே யுன்வார்த்தை யெல்லாம் அத்தனையும் பொய்யடியோமாதே

அரிதானசத்திராசித் தருந்தவத்தால் பெற்றெடுத்தமாதே சமந்தகமென்னு முனியுடனே சிதனமாய்ப் பெற்றாரோடியுன்னை

பட்டஸ்திரீயானவுந்தனுக்கு பக்ஷபாதமில்லாமலே
கண்ணன் பாரிஜாத
புஷ்பங்கொண்டு பருந்தனுக்குக் கொடுத்தாரோடி
கண்

4. (ஐயாமுருகேசா) என்ற இராகம்

குண்டுணிநாரதர் கலங்ககேட்டு கோபத்துடனே
ஸத்தியபாமை அந்த
ரங்கதோழிகளை அழைத்துவாயென்றான் கோபா
லனை
(கொண்டுவாடிசகியே கோபாலனை க்ஷணத்தில்)
சிங்காரலீலையை செய்துகொண்டு ஸ்ரீராஜகோபா
லனும் பஞ்சனைமேல்
ருக்மணியுடன் பகடைகளையாடி யிருப்பார்
(கொண்டுவாடிசகியே கோபாலனை க்ஷணத்தில்
இந்திரஜாலவித்தைபோல் என்னைவந்துமயக்குகிறா
ர் இஷ்டமுடனே
ருக்மணியுடனெப்போழும் ஜொலிக்கிறார்
(கொண்டுவாடி சகியேகோபாலனை க்ஷணத்தில்)
மதனதோகனரூபனடி மங்கையற்குஜாலன வேணு
க்யானலோலனடி
வேகத்துடனே யழைத்துவாடி.

(கொண்டுவாடி சகியேகோபாலனை க்ஷணத்தில்)

5 இராகம் கைம்மானம்

இன்னம் வரக்காணேனடி எந்தனுடைய பிராணனு
தன் என்னசெய்வேன் பொற் கொடியே எந்தன் மனமு
ருகுதடி பப்பப்பா பப்பப்பா தனிதாப் பனிபா த னீ மா
தாபபனீப தனீஸா தனிஸானிரிஸ்ஸா

மதனம்மாகனரூபமுள்ள மந்த ஹாஸமுகத்தழகும்
மாணிக்கம்போல பல்லழகும் மதுரங்கள்போலொத்த
வார்த்தைகளும் (பப்பப்பா)

மாகதம்போல் மாரழகும் மகரகண்டியும் பதங்களு
ம் மன்மதன் போல் வடிவழகும் மத்தகஜம்போல் நடை
யழகும் (பப்பப்பா)

நீலக்கொண்டையும் கஸிக்கித்துராவும் நெத்தியில்
கஸ்தூரிபொட்டழகும்

வக்ஷஸ்தலத்தில் லெக்ஷிமியுடன் வனமாலலங்கிரு
த சோபிதராய் (பப்பப்பா)

ஆனிமுத்துநவரதன் வாபரணங்காந்தியுடன் பெ
ருத்த தொருரிகடதனிலே பீதாம்பரசோபிதராய் (பப்ப

கஞ்சமலனேத்திரனடி கன்னியற்குசுந்திரனடி க
ஞ்சனையும் வஞ்சனை செய்த வஞ்சகனைக் காணேனடி
(பப்பப்பா)

6. இராகம் காவடிச்சிந்து

கண்ணன்பகவானும்வந்தார் கையைபிடித்தார் கட்டியணைத்தார் முத்தங்கொடுத்தார் கண்மணி கலங்கினதென்றுரைத்தார்

மோசங்கள் செய்திரே கண்ணு மணிவண்ணு வொணிமின்ன நேசஞ்செய்யாவிட்டால் மோசமென்று

சுந்திரமுள்ளதோர் பெண்ணே என்னிருகண்ணே ஜோதிமின்னே சோரத்தனமென்ன செய்தேனடிவுன் முன்னே

பாலைத்திருடி நீர்குடிக்க கட்டிப்பிடிக்க மத்தாலடிக்க பாலலீலைகள் செய்தது சோரம்

தேவமுனிபுஷ்பங்கள்கொடுக்க கையால் தொடுக்க வாரிமுடிக்க தேவருக்மணி பாக்கியம்செய்தாள்

இதற்க்கோடி வுனக்கிந்தசோகம் வெகுகோபம் ஐயோபாவம் கொள்ளைபுஷ்பத்தை கொடுக்கறேன் க்ஷணத்தில்

7. (நாமகிரிதாயாருன்னதின்) என்கிற இராகம்

கொண்டுவருகிறேன் பாரிஜாதகோகிலமே பொற்கொடியே நந்தவனந்தனிலே நாட்டியிருக்கும் பாரிஜாதம் (கொண்டு)

ஏறுகிறேன் கெருடத்ஜவ மெடுக்கிறேன் சக்காத

தை தேவலோகம் செல்லுகிறேன் தேவராஜனை வெல்லு கிறேன் (கொண்டு)

வணங்கிபுஷ்பத்தைக் கொடுக்காவிட்டால் வஜ்ராயு தத்தை நொருக்குகிறேன் வனத்திலுள்ள புஸ்பச்செடியை வேறுடனே பிடுங்குகிறேன் (கொண்டு)

அரமனைதோட்டத்திலே யலங்காரமாய்நாட்டுகிறேன் விந்தயுடனே புஷ்பங்களும் விநோதமாக முடிக்கலாமே (கொண்டு)

பறிக்கலாமே புஷ்பங்களை தொடுக்கலாமே யலங்கிருதமாய் முடிக்கலாமே கூந்தலிலே மோகனங்கி சத்தியபாமை (கொண்டு)

8. (அரிபாலோ) என்ற இராகம்

அந்தமுடன் தேவராஜ் னயுதங்கொண்டு வஜ்ராயுதங்கொண்டு ஐராவதமென்னும் வெள்ளையானைமேற

துங்கநவமணி யலங்கிருதமான அலங்கிருதமான துவாரகை யென்னும் பட்டணம் வந்தார்

அபாஞ்சத்தங்கம் நவரெத்தினமிழைத்த நவரெத்தினமிழைத்த அந்தமுடன் சத்தியபாமை யாண்மனை வந்தார்

கோடிமன்மத ரூபலாவண்யமுள்ள லாவண்யமுள்ள கோபாலகிருஷ்ணன் சத்தியபாமையைக்கண்டார்

கனகமணிரெத்ன கிரீடங்கள் ஜொலிக்க ரெத்ன கிரீடங்கள் ஜொலிக்க கண்ணனுடைய திருவடிபணிந் தார்

கடகங்கள் கங்கண கணயாழி மின்ன வஜ்ஜிரக்க ணையாழி மின்ன கைகளைக்கூப்பி துதிகளைசெய்தார்

அண்டசராசரந்திற்காதாரமுள்ள ஜெகதாராதாரமுள் ள அடியாரை ரக்ஷிக்கும் கிருபாநிதிதாமே

அபயமென்றழைத்த கஜேந்திரனைகார்த்த ஆதிமூ லப்பொருளே யடைக்கலமென்றான்

கோரமான துஷ்டராக்ஷஸனாலே துஷ்டராக்ஷஸனா லெ கொடுமையை பொறுக்க முடியவுமில்லை

ஈனமான துஷ்ட நரகாஸுரனாலே நரகாஸுரனா லே எல்லோருந்துப்பமடைகிறோம் ஸ்வாமி

9, (சாரங்கனே வா) என்ற இராகம்

இந்திரலோகம்போகிறார் இந்திரலோகம்போகிறார் இஷ்டமுட ஸத்தியபாமயுடன்கூட யிந்திரலோகம்போகி றார்

ஸற்குணசீலரான கோபாலகிருஷ்ணன் சத்தியபா மயுடன் கூட சங்குமுடன்கதை ஆயுதமேந்தியே ஆயுத மேந்தியே சந்தோஷமாகவே வொய்யாரன் (இந்திர)

தங்கப்பறுவதம்போலொத்த மங்களகெருடன்மே

ல் சிங்காரமானந்த வொய்யாரன் துங்க நவமணிபூஷண
'மலங்கிருத சோபிதமான கெம்பீரன்' (இந்திர)

மன்மதன்ரதிபோல் சேர்வயைக்கண்டு மகத்துக்க
ளெல்லாம் கொண்டாட துந்துபிவாத்தியங்கள் தேவர்க
ள் கோஷித்து துய்யமருமலர் மாரிசொரிய (இந்திர

கின்னரர் கெந்திருவர் கீதங்கள்பாடவும் கேளிக்
கைரம்பைகள் நர்த்தனம் செய்யவும் முப்பத்திமுக்கோ
டி தேவர்கள் பணியா முகுந்தனை யெதிர்வந்து கொண்
டாட (இந்திர)

ஆண்டாபதியுடன் கண்ணனுகூடி அரக்கனிருக்கு
மிடந்தனைநாடி யிருவருங்கூடி யெதிர்த்துப்போராடி
எதிர்த்துப்போராடி யாக்கனைமுடித்தா ரண்டங்கள் செ
ழிக்க (இந்திர)

இந்திரன் ஜெயங்கொண்டான் துந்துபிமுழங்க எல்
லோருமானந்தங்கொண்டாடித்துதித்தார் நரகாஸுரனு
லேசிறையிலிருந்த பெண்கள நந்தகுமாரன் சிறையிட்டா
ர் (இந்திர)

10 (இனிமேல் சீலையை(என்ற இராகம்

பாதத்தில்பணிந்தோரையா தரித்தருளும் தீனகிருபா
ணிஓயேபதிநோறுயிரத்தாறுபெண்கள்பச்சப்பசுங்கி
ளிபோல்ஜொலிக்கபாவியரக்கனல் துன்பங்களடைந்தோ

ர்க்கு பரமகிருபானிதிஸேர்வை தன்தார் (பாத)
கந்தர்ப்பகோடி லாவண்யங்கண்டுசுந்தரிகளெல்லோரும்
மகிழ்ந்து கரங்களைக்குவித்து அபயங்களென்றார்கள் கண்
ணனைவந்து திருவடி பணிந்தார்கள் (பாத)

அண்டாதிபதிகட்கு பெண்களாய்பிறந்து நாங்களர
க்கனால்துன்பமடைந்தோம் அற்புதமானஉமதுஸேற்வை
க்கண்டோமடைக்கலமெங்களைக்கைக்கொள்ளுமென்றார்
கள் (பாத)

கருகமணிபூண கதியில்லாதபேர்க்கு கவுஸ்துபமெ
த்னத்தைககண்டோம்
நவரெத்னமயமான பூஷணங்கிடைத்துபோல நாகனே
யெஙகளை யாதரித்தருளும் (பாத)

மன்மதன்கணையாலேயடிப்பட்டுநொந்தோம் மருமம
விட்டு நாம் சொன்னோம் மதுரஙகள்போலொத்த அதுர
க்கனிமேலாசை கொண்டோம்
மா நவனேயும்மை நாஙகள்மாலையிடுவோம் (பாத)

அற்புதமருவே கற்பகத்தருவே யஞ்சவேண்டாமெ
ந்தன் கண்மணியே
அடைக்கலமென்றவுரையாதரித்தருள் வோமனைவருந்
துவாரகை பட்டணஞ்செல்வோம்

11 (தஙகத்தும்பாரு) என்ற இராமம்

அந்தமுடன்ரத்னங்க ளலங்கரித்தேர்தனிலே யன்
வங்கள்பூண்டிருக்கும் பாருங்களடி பெண்மணிகளேதே
ரின்மேலேறுங்களடி கண்மணிகளே

மரகதங்கள்நீலமொடு மணிவரத்தேர்தனிலே மத்த
கஜம் பூண்டிருக்கும்பாருங்களடி பெண்மணிகளேதேரில்
மேலேறுங்களடி கண்மணிகளே

பொற்கொடிமாதரசே பூர்ணச்சந்திரஜோதியே பு
ஷ்பரதம்வந்திருக்கிறது பாருங்களடி பெண்மணிகளே
தேரின்மேலேறுங்களடி கண்மணிகளே

கண்ணாடிகோச்சுவண்டி கல்லிழைத்தபெட்டிவண்
டி கறுக்கானபீடன்வண்டிபாருங்களடி பெண்மணிகளே
தேரின்மேலேறுங்களடி கண்மணிகளே

யானைக்குதிரைகளா மந்தமுள்ளரதங்களும் ஆணி
முத்து பல்லாக்காம் பாருஙசளடி பெண்மணிகளே தே
ரின்மேலேறுங்களடி கண்மணிகளே

12 (ராமா கருணைவல்லியோ) என்ற இராகம்

மாதரெல்லாந்தேரிலேறினார்கள் மங்களமாய் துவா
ரகையில் வந்துகூடினார்கள்

ஆனந்தவலாகரமண்டார் பெண்களெல்லா மமூர்தத்
தைபாணமாயுண்டார் மதனமோகனரூபகோபாலகிருஷ்
ணனை மணமானருடனைக்கு மங்களமாகவே (மாத்)

ஊர்வசிரம்பைபோலே பெண்களெல்லா முத்தமிடவாலேமின்னற்கொடியிடையுங்கண்ணற்புஷ்பவிழியும் அன்னக்கிளிநடையு மலங்காரரூபத்துடன் (மாத)

மன்மதன்தேவியான ரதிபோலே மாணிக்கவொளியோடேபத்மதைப்போல்முகமும்பவழம்போல்கனிவாயும்பச்சப்பசுங்கிளிபோல்பாஞ்சோதிபோல்வந்து (மாத

அந்தமுடன் தண்டைசிலம்போசையி யண்டமெல்லா திண்டுமுண்டாட பண்டுபகிர்ந்தவமிர்தமண்டர்க்களித்தபோது கண்டனுக்காகக் கொண்ட தோர்மோகினிப்போலே (மாத

13 (ஸாசஸஸமமுகபாமவிமா)என்ற இராகம்

தேவலோகம்போகிறார் கண்ணன்றேவியான சத்தியபாமையுடன் கூட

தங்கப்பருவதம் போலொத்த மங்களமெருடன்மேலதுங்கநவமணி பூஷணவலங்கிருதர் (தேவ)

மங்களவாத்தியமொடு சங்கீதநாட்டியமொடு மனதுமகிழ்ந்து தேவரெதிர்வந்துபணிய (தேவ)

அந்தமுடனிந்திர னிந்திராணியுடன் கூட ஐராவதமேறியாண்டவனைத்ஸ்துதிக்க (தேவ)

சொர்ணமலர்புஷ்பத்தை பாதத்திற்சொரிந்து சோடசவுபசாரமிந்திரன்செய்ததி (தேவ)

பரஞ்சோதிசொரூபர் கோபாலரென்றறிந்து பாரிஜாதபுஷ்பத்தை யிந்திரன் கொடுக்காமல் மோசம் போனான் (தேவ)

அந்தமுடன் பாரிஜாதபுஷ்பத்தை யிந்திராணியாண்டவர்க்குக் கொடுக்காமலவமானஞ்செய்தாள் (தேவ)

துஷ்டனென் இந்திரன் கொட்டத்தை யடக்குகிறேன் உன்னிஷ்டப்படி பாரிஜாதம் க்ஷணத்திலே கொடுப்பேனென்றான் (தேவ)

சந்தோஷமாககண்ணன் கூத்திபர்மையுடன் ஜதில் துவாரகைவந்து சேர்ந்தார் (தேவ)

14. ஏருல்லதாரு என்ற இராகம்

அபரஞ்சித்தகம் வஜ்ஜிரத்தினால் ஏஜெகதீசன்
அரன்மனைகளலங்கரித்தார் ஏஜகதீசன்
ஆணிமுத்து ரத்தினத்தால் ஏஜகதீசன்
அற்புதம்போல் பந்தலிட்டார் ஏஜகதீசன்
மரகதமணி மண்டபத்தில் ஏஜகதீசன்
மகரதோரணம் நாட்டிவைத்தார் ஏஜகதீசன்
பதினாறாயிரம் கன்னிகையிடம் ஏஜகதீசன்
பக்ஷமுடன் கிட்டவந்தார் ஏஜகதீசன்
அந்தமுடன் பெண்களையெல்லாம் ஏஜகதீசன்
அலங்காரங்கள் செய்யச்சொன்னார் ஏஜகதீசன்

ஆணிவைரத்தங்கத்தினுல் ஏஜகதீசன்
ஆபரணம் பூண்டுகொண்டார் ஏஜகதீசன்
அஷ்டாதி வாத்தியங்களாம் ஏஜகதீசன்
ஆனந்தமாய் கோஷிக்கவே ஏஜகதீசன்
அத்தனைபேர் பெண்களுக்கும் ஏஜகதீசன்
அங்கங்கே கூடியிருந்தார் ஏஜகதீசன்
மாணிக்கபீடத்திலே ஏஜகதீசன்
மணைதனிலே வீற்றிருந்தார் ஏஜகதீசன்
வேதியர்கள் முன்பாக ஏஜகதீசன்
விவாகங்களை நடத்திவிட்டார் ஏஜகதீசன்
மங்களமாய் முகூர்த்தத்திலே ஏஜகதீசன்
மங்கிலியந்தரித்தாரே ஏஜகதீசன்
மோகங்கொண்ட பெண்களெல்லாம் ஏஜகதீசன்
ஒருமுகூர்த்தத்திலே மணம்புரிந்தார் ஏஜகதீசன்

15. நடப்போம்வாடி என்ற இராகம்

குண்டுணிநாரதர் கலகங்கள்செய்ய கோபாலகிருஷ்ணனை க்காணவந்தார்

திரிலோகங்களும் சஞ்சாரஞ்செய்வார் திரிமூர்த்திகளையு மடிபணிவார் கர்ணமிர்தம்போல்கீதங்கள்பாடுவார் கலகங்களங்கேசெய்திடுவார்

சிங்காரமாகவே ருக்மணியுடன்கூடி ஸ்ரீராஜகோபாலனெதிரேவந்து சோடசவிதமாக வுபசாரஞ்செய்து சொரணமணியாசனஞ்சமர்ப்பித்தார்

பரமானந்தமாம் கண்ணனுக்கு பாரிஜாத புஷ்பத்தை ஸமர்ப்பிததார் பக்ஷமுடன்ருக்மணிகொண்டையில் முடிக்கப்பார்த்தங்கே நாரதர்பிரமித்துநிற்க (குண்டு)

சத்தியபாமைக்குக் கொடுக்காமலே ஸ்வாமி வஞ்சனைசெய்தாரென்று ஐடுதியில்நாரதரெழுந்திருந்தார் சத்தியபாமையைக்காணவந்தார் (குண்டு)

பாமையவள் மகிழ்ந்தெதிரேவந்தாள் பாங்குடனன்றாக வுபசரித்தாளந்தமுடன் வந்து திருவடிபணிந்தாள் ஆசீர்வாதங்கள் செய்யதொகந்தாள் (குண்டு)

16. (ட்விங்குல் ட்விங்குல்) என்ற இராகம்

சர்க்குணசீலையே சத்தியபாமை ஸ்வாமி யிங்கே பிரியமாக விருக்கின்றாரா

மஹாமுனிகள் தங்களனுக்கிரகத்தால் மாதவன்பிராணனைக கூடவிருக்கின்றார்

அடிககடி புஷ்பங்கள் கொடுக்கும்பொழுதாண்டவனும் ருக்மணியுடன் கூட விருக்கிறார்

முடிக்கின்றபுஷ்பத்தைக் கையாலே ஜொலிக்கின்றாங்கேயிருவருமாய்

கண்ணன் பகவான் மோசமெல்லா ங்கண்டேன் க
ண்மணி நம்பாதே

பட்டஸ்திரீகளெட்டும்பேரில் பக்ஷமெல்லாம் ருக்
மணியண்டையிலே

பாரிஜாதபுஷ்பங் கொடுக்காமலே பக்ஷபாதகஞ்செ
ய்தாரே கண்டேன்

நாரதர் கலகங்கள் போதிக்கவே யென்றுதனுடனி
னி நான்பேசேனென்றாள்

கூர்முழிகள்சிவந்திடவே கோவக்கனியாய் துடிக்
திடவே புஷ்பங்களை களைந்துவிட்டாள் பூஷணங்களை க
கழட்டிவிட்டாள்

கோலாகோலமாய் வேஷத்துடன் கோபாக்ரஹத்
தில் பள்ளிகொண்டாள்

17

கண்ணன் பகவானும் வந்தாரே ஸ்வாமிபாவையை
க்காணமற் கலங்கியே நின்றாரே

குரூரமுடனே சத்தியபாமையும் ஸ்வாமிகோபாக்
ரகந்தன்னில் படுத்ததையுரைத்தார்கள்

அந்தரங்கத்தோழிகளுரைத்தார்கள் ஸ்வாமி யந்த
க்ஷணத்திலே வந்தங்கே பார்த்தாரே

கண்மணியே சத்தியபாமையே நீ கலங்கியிருப்பா

னே னிதுயாருடையகல்பனே
பூஷணங்களைக்கழட்டியே பூமியில்படுப்பானேன் ஞன்க
ண்டுசகிப்பேனுமாதரசே யேனிந்தசோகங்கள் மதுரக்க
னிவாய்திறந்து குயில்போலுரைத்திடாயே

மோசக்கார கண்ணனே பேச்சென்ன கிருஷ்ண
நேசமுள்ள ருக்மணியங்கே வரச்சொன்னாள்

ஆசைகள்மோசங்களங்கேயே மோசஜாலங்கள்செ
ய்வதிங்கேயே

தப்பிருந்தால் ஜடையாலடிப்பாயே பெண்ணேயென
க்கு தயவுடனொரு முத்தம் கொடுப்பாயே

உன்னிஷ்டங்களின்னதென்றுரைக்கவா மினிஞன்
கொடுக்காவிட்டால் வந்து படுக்கலாம்

மஹாமுனி புஷ்பத்தைக்கொடுத்தாரே மாதுருக்ம
ணிகொண்டயில் முடித்தாரே

முப்போழைபார்த்து நான்ஸகித்தேனே கண்ண
முழுமோசங்கள் செய்ததையறிந்தேனே

மாணிக்கதீபமே மஞ்சுளம் மதனமோகன சுந்தர
மே நீ யெழுந்திரு

கொண்டுவருகிறேன் புஷ்பமரத்துடன் பாமையுங்
குன் கூந்தலைகளைமேல முடிக்கிறேன்

அந்தச்சமயத்தில் நாரதர் அந்தரத்தியானமாய் ப

றந்தங்கே வந்தாரே

18. (கார்க்கவேவருவாய்) என்ற இராகம்

சத்தியபாமைக்காக வொருபிரதிக்கினை செய்திருக்கின்றேம் ஜெடுதியில் செய்யவேணும் மஹாமுனியே யெனக்கொருபகாரம் தேவமுனியேதாங்கள் தைவலோகம் சென்று தேவேந்திரனைக் கண்டென் னபிப்பிராயம் தெரிந்திட சொல்லவேண்டும்

பொன்னுலகிலருதான புஷ்பிக்கும் பாரிஜாதம் பூலோகதுவாரகையில் சிலகாலம் பூபதியனுப்பவேண்டும்

என்னுக்கினையைமீறியவன்லக்ஷியஞ்செய்தானு லந்தக்ஷணத்தில் வருவேன் தேவலோக மதமாமை செய்துபோடுவேன்

அந்தக்ஷணத்தில் நாரதருமண்டாதிபதியைக் கண்டு ஆண்டவன்கோபாலனுரைத்தவொரு வாக்கினையென்றுசொன்னர்

மானிடரானவிந்த கோபாலகிருஷ்ணனிக்கு மகுத்துவமுள்ள பாரிஜாதம்கொடுக்கேன் நானென்று சொன்னர்

அண்டாதிபதியும்மை யலக்ஷியம் செய்தாரென்று ஆண்டவன்ஸன்னதியில் விக்ஞாபனமாக்ரோஷத்துடன் சொன்னர்

19. (நலுங்கிடுகிருன) என்ற மீனலோசனி இராகம்

சண்டையிட்டு புஷ்பம்கொண்டு வந்தார் கண்ணன் சத்தியபாமைக்காக

கண்ணன்பகவானும் கோபங்கள்கொண்டார் கரு மேகர்ச்சனைபோல்

கையில்கதையும் சகிகரமும்கொண்டு கெருடவாகனமேலேறிக்கொண்டு

சுவர்ணமணிமய விந்திரலோகத்தில் சோரனைபோலவந்தார் பணிக்கா

புஷ்பவனந்தன்னில் புகுந்தார் பாரிஜாத புஷ்பத்தை வேருடெடுத்தார்

கற்பகபுஷ்ப்பம்போல் பாரிஜாதவிருக்ஷத்தை ஒத்தக்கைதன்னிலேந்திக் கொண்டார் கண்டங்கேதேவர்கள் கொண்டாடித்துதிக்கவும் கண்ணனும் துவாரகைப்பட்டணம் வந்தார் (சண்டை)

காவலர்கள்சொல்ல விந்திரன்கேட்டு கடுஞ்சினகோபம்கொண்டு வஜ்ஜிராயுதம்கொண்டு வெள்ளையானையேறி வந்தாரே சண்டைக்கு துவாரகைப்பட்டணம்

பார்மீதிலிருசூரியன்கூடி பாங்காக வுதித்ததுபோல் கார்மேகனுதனும் கண்ணனும்கூடி கர்ச்சனையுடன்கூட யுத்தங்கள்செய்யவே

தேவாஸுராளுத்தங்கள்போல் செய்தார் தேவார ஜனும் கண்ணனுமாம்

அற்புதமானந்தசண்டையைக் கண்டு அதிதேவியும் காசிப்பிரஜாபதியும் வந்தார்

தந்தைதாயைக்கண்டிருவர்களுமாக வந்தனஞ்செய்து நின்றார்உத்தமபுத்திரரிரு ரத்தினமென்று சத்துவும் போதித்து சமாதானம்செய்தார்

இந்திரன்கேட்டு சந்தோஷம்கொண்டு ஜெகதீஸ்வரனென்றறிந்து மலரடிபணிந்து பதிமோசமென்று மாதவனுக்குப்பவிருக்ஷத்தை சமர்ப்பித்தார்

இந்திரன்தன்னுடைய லோகத்துக்குசென்று றெல்லோரும் கொண்டாடவே பக்ஷமுடன்கண்ணன்சத்தியபாமைக்குப் பாரிஜாதவிருக்ஷத்தைத் தோட்டத்தில்நாட்டினர் (சண்டை)

20. (வஸந்தஉற்சவததில்) 3 வது இராகம்

பட்டணமெல்லாம்பரிமளம்வீச பாரிஜாதவிருக்ஷம் பூச்சொரிய பத்மங்கள்போலொத்த காத்தால்தொடுத்து பாங்காககொண்டையில்முடித்துக் கொண்டாள் போவானந்தம் போவற்புதம் போ

சுவற்ணபரணங்கள் பூண்டுகொண்டாள் ஜோறாகபுஷ்பத்தை முடித்துக்கொண்டாள்

அற்புதமானந்த கற்பகபுஷ்பத்தை யலங்காரமாகவே சூட்டிக்கொண்டாள் போ

மதனமோகனசுந்தரரூபன் மாதவன் கோபாலன்வந்துவிட்டார்

அற்புதபூஷணசோபித புஷ்பாலங்கிர்தபொற்க்கொடியாள்பானமுபசரித்தாள் போ

பட்டத்தரஸிசத்தியபாமை யவளிஷ்டங்கள் பூர்த்தி செய்துவிட்டேன் போ

பக்ஷமுடநிந்திரன் விருக்ஷத்தைக்கொடுத்தான் பாக்கியவசமென்று பெற்றிக்கொண்டார் போ

21. (நன்னன்ன) என்ற இராகம்

புஷ்பங்கள்நன்ருய் முடித்துக்கொண்டாள் பூஷணம் நன்ருய் தரித்திக்கொண்டாள் போற்புடவை யுடுத்திக்கொண்டாள் பூமியிற்சந்திரன்போலவிளங்கியிருந்தாள்

பாபாபா மகமகமா கரிகரிமா கரிகரிசா லாலிலலா லலில லா லாலிலலா

அற்புதமானந்தபூஷணமும் கற்பகபுஷ்பங்களுடையவாசனேயும் கண்ணனுக்கேவுகப்பாயிருக்குமென்றுபாமை கண்ணடியில்பார்த்துகத்துகொண்டாள் பா

பட்டஸ்திரிகளுக்குள்ளே நாமேபாக்கியம் செய்

தோமென்றுகந்துபாரில் ஒருவரும்தனக்கீடில்லயென்று பரமானந்தமாகமகிழ்திருந்தாள்

அகம்பாவம்கொண்டசத்தியபாமைக்குக்கண்ணன் அவமானம்செய்யவேண்டுமென்று ஆண்டவன் மனதில் நினைத்தவுடனே வாயுவானந்தம் கொண்டு எழுந்துவிட்டார் பா

22· (பள்ளு) என்கிற இராகம்

பக்ஷமுடனேவாயுதேவன் லக்ஷிமிக்கி புஷ்பத்தை பதுந்துகொடுப்பேனென்று மகிழ்துவீசினர்

கொம்புசுற்றிகாற்றடிக்க குலுங்கவசைந்தாட கோபாலன் கிருபையால் புஷ்பமரவுஞ்சாயவே

அந்தமுடன்ருக்மணி யரண்மனைதோட்டத்திலத்தனைபுஷ்பமும் பூத்துசொரிய மரத்தடியிற்புஷ்பமலரொன்றும்காணமல் மலர்சூடும்ருக்மணியை யறிந்தாலேபாமை

சண்டையிட வந்துவிட்டாள் சத்தியபாமையும ஸ்வாமிக்குமுன்னலேவந்து சவத்திவாவென்றாள்

கபடனைகிருஷ்ணனை கைவசம்கொண்டு கள்ளத்தனமாய் புஷ்பங்களைபறித்துக் கொண்டாய்

ஆரடிநீயென்னை யதட்டிப்பேசுகிறயரண்மனை யேறாதே யப்புறம்போடி

அரண்மனைக்கதிகாரி யறிவேன்டிநானுன்னை அன்

17863!

பாயகிருஷ்ணனை யனுப்புவாயெடிமுன்னே

அனுப்பினநாரதர்பின்போனகிருஷ்ணனும் அனை வரும்தூஷித்து சிரித்தார்களேயுன்னை

ஐந்துகுடுமிவைத்துதேர்தனிற்கட்டி யுன்னண்ணனை சிரித்தாரடிபோடி

தாலிகூரைமீதல் தனமெல்லாஞ்சொரிந்து திராசில் வைத்து நிறுத்தாயேகண்ணனை மீட்டுக்கொண்டாயோ

வேதியர்கண்ணனைவலுவிலழைத்துப்போய் வெள் ளாட்டிபோல்வந்து சேர்ந்தாயேயிங்கே

வெள்ளாட்டிகை திருத்துழாய் தளத்தால் வையம ளந்தமாயனை மீட்டிக்கொண்டேனே

சண்டையிட்டபெண்களை சமாதானம்செய்து கண் ணன் சமமாகபுஷ்பத்தை கொடுக்கிறேனென்றார்

23. மங்களம்

தேவாதிதேவனுக்கு தேவானுகூலனுக்கு
தேவிருக்மணிசத்தியபாமைசமேதனுக்குமங்களம்
அஷ்டலக்ஷ்மிவாசனுக்கு வகிலஜகனுதனுக்கு
அரவிந்தலோசனுக்கு வம்புஜாக்ஷனுக்குமங்களம்
கோபாலபாலனக்கு கோபிகா ஸ்ரீலோலனுக்கு
கோவர்த்தனவுத்தாத்னுக்குகோபாலனுக்குமங்களம்
காளிந்திநட்டனம் சேயதவர்க்கு

D-185MAA213
NIL

கம்சசம்மாரனுக்குக் கருணையுடன் துரோபனதக்கு
க்துயில்கொடுத்தவர்க்கு மங்களம்.

ஸ்ரீரங்கநாதன் சன்னதியில்

திருட்டுப்போன

கும்மி

1. பட்டமணியக்காரன் இராகம்

பன்னிரண்டாழ்வாருடன் பாஷியக்காரரையும் பர
மவாசார்யரான வேதாந்ததேசிகரே பாதம்பணிந்தேனிப்
பேர் வாசார்யரே பாதம்பணிந்தேனிப்போ

வாணிசரஸ்வதியே வாக்கிலேவாருமம்மா வந்தன
ஞ்செய்கிறேனரவிந்தமலர்பாதத்தை வாணிசரஸ்வதியே
வாருமம்மா வாணிசரஸ்வதியே

மந்திரியாய்விளங்கும் தொந்திக்கணபதியே முந்

திவினயகரே முக்கண்ணன் திருமகனே யெப்படிசம்மதி த்தீர் கள்ளன்வரயெப்படிசம்மதித்தீர்

அரங்கேசன் சன்னதியிலர் தமுள்ள ஜெவிஜயவாக் கினையைமீறிவந்த வதிசயமேதுகாண்யெப்படி சம்மதித் தீர் கள்ளன்வரயெப்படிசம்மதித்தீர்

அந்தமுடன்பிர்மதேவன் வாராதித்துக்கொண்டுவ ந்த அஷ்டதிக்குப்பாலர்களே துஷ்டர்களை யுள்ளேவிட யெப்படிசம்மதித்தீர் கள்ளன்வரயெப்படிசம்மதித்தீர்

2. இன்னும்புரியாதலக்ஷிமியுடன் என்ற இராகம் அலங்காரவல்லியே ஸ்ரீரங்கநாயகி யன்புடன்வா ழுமலர் மார்பன்நம்பின பக்தரைரக்ஷிக்கும் ஸ்ரீரங்கநாத ன் திருவடியை பணிந்தேன்

எழுமதிலுள்ளகோபுரமா மேத்தமுள்ள துவாரபா லர்களாம் கல்கொம்புகொண்டு சன்னதிவாசல்க் காக்கு ம் தேவதைகளாம்

கற்கோட்டையானவந்த சன்னதிக்குள்ளே கள்ள ன்வந்துசொத்தைக் கொள்ளையிட்டான் கஸ்தூரிரங்கரும் சொர்ப்பனம்சாதித்து கண்டுபிடித்ததை க்கும்மியாய்ப் பாட

அரும்பாவியான வந்தகள்ளனுக்கு அயோத்திப்பிர சாதனனென்றுபெயராம் மூன்றுவருஷகாலமாயிங்கே மி

ட்டாய்க்கடையைவைத்திருந்தான்

மோசம்செய்யவேணுமென்றுநினைத்து நேசங்கள் கொண்டுவெகுபேரை காசுபணங்களைக்கையில்கொடுத்த வன்வாசிரலங்களைப்பெற்றுக்கொண்டான்

ஆஸ்தானமுதலானசன்னதியெல்லாமடங்கலுமாரா ய்ந்துப்பார்த்துக்கொண்டான் அந்தமுள்ள திவ்யவிமான த்தின்மேலஞ்சாமல்வந்தங்கே யேறிக்கொண்டான்

3 காவேரியம்மன் சோபனத்தில் (9வது இராகம்

கன்னங்கள்வைத்ததுஜானுள்ளவகலம்கயர்கட்டியி ரங்கினன்கள்ளனுபாயம்வாண்டவன்பொறுத்ததுமதுவு முபாயம்யனேகமாய்சொத்தைக்கிரகித்தாரே மாயன்க ள்ளனும்வந்தானேசன்னதிக்குள் கொள்ளையடித்தானே

வஞ்சிக்கொடியாளும் வைகுண்டவாசரும் கொஞ்சி க்குலாவியேகூடிருக்கும்பொழுது வஞ்சகனைவந்த மா பாவிவந்து அஞ்சாமற்கொள்ளையடித்தானேபாவிகள் வ னும்வன்தானே சன்னதிக்குள்கொள்ளையடித்தானே

திருமகள்காத்திற்கு பரிமளம்கொடுக்கும் திருவடி யிதணிந்தண்டைசிலம்பும் கோடிசூர்யப்ரகாசமாம்விள ங்குகிறகிரீடத்தைக்கைபிலெடுத்தானே பாவிகள்ளனும் வந்தானே சன்னதிக்குள் கொள்ளையடித்தானே

வக்ஷஸ்தலத்தில்வசிக்கின்ற லக்ஷ்மிபதக்கமும் விலை

யில்லாரத்ன கவுஸ்துபரத்னா ஹாரமும் போகசயனரான பெரியபெருமாள்பொற்பூணலுந் தங்கச்சடாரியையுமெடுத்தானே கள்ளனும்வந்தானே சன்னதிக்குள்கொள்ளையடித்தானே

4 ஹால்ஜென்னலோ என்ற இராகம்

நித்தியப்படி திருமஞ்சனம் யானைமேல்கொண்டுசேமமுடன்விமானத்தை வலமாகவந்தார்கள்

கள்ளன்வந்திருக்கின்றதுபோல்சந்தேகங்கொண்டுலக்கமுடனெல்லாருந் திடுக்கிட்டுநின்றார்கள்

திருக்காப்புநீக்கியவர்கள் பார்க்கலுமே திருவாபரணமொன்றையுங்காணவேயில்லை

மேலானவதிகாரிகள் பார்வையிட்டார்கள் மேஸ்ரிட்டுபோலீசுக்கு யறிவித்தார்கள்

க்லெக்டர்மேஸ்ரிட்டு போலீசார்வந்து கன்னம்வைத்தவிடங்களையெல்லாம் பார்வையிட்டார்கள்

அரங்கருக்குயடிமையுள்ள பேர்வழியிலேயார்மேல் சந்தேகமோ சொல்லுங்களென்றார்கள்

உள்ளாள்களில்லாமலேகள்ளர்களுண்டோயுண்மைகளைச்சொல்லாவிட்டால் விடுவதில்லையென்றார்கள்

அன்றையதினமுறைபார்த்த அர்ச்சகர்களிலனுமானமுள்ளபேர்களைகாவலில்வைத்தார்

இன்ஸ்பெக்டரும் சூப்ரண்டரும்மிரட்டுநகளெண்ணூர்கள்எமதூதர்களைப்போல வந்தார்கள்கான்ஸ்டேபிள்களும்

கண்டபடிகான்ஸ்டேபில்களுமிரட்டலும்மே கருணையுடன் ரஙகனுதர் கிருபைசெய்தாரே

5. (மாப்பிள்ளை துரைமதுரையிலே) என்றஇராகம்

கள்ளர்கள்சொத்தையபகரித்து காசிதேசஙகொண்டுபோனபின்பு கஷ்டப்பாடும்சொந்த பக்தர்களுக்காகஜல்திரஙகரவர்வரவழைத்தாரவர் ஜல்திரஙகர்வரவழைத்தார்

முந்தாணிக்குள்ளே நெருப்பைத்துமூடியே பத்திரம்பண்ணினதுபோல் சர்ப்பஙபோலவேசீறிக்கொண்டுசொத்ததைவிற்பனைசெய்யத்தொடஙகிவிட்டானவன்விற்பனை செய்யத்தொடஙகிவிட்டான்

தங்கங்கள்நீலங்கள் செம்புகளைத் தனித்தனியாக பிரித்துக்கொண்டு வியாபாரியைப்போலே வேஷத்தைப்பொட்டு வர்த்தகஞ்செய்யத் தொடங்கிவிட்டாநவன்வர்த்தகஞ்செய்யத்தொடங்கிவிட்டான்

கல்நோட்டந்தெரிந்தவர்த்தகர்கள்கவிஸ்துவாபாணத்தை கண்டுவிலைமதிக்கமுடியாமலந்த வர்த்தகர்களெல்லாம் சந்தேகித்தார்களந்த வர்த்தகர்களெல்லாம் சந்தேகித்தார்கள்

அழகியமணவாளன் சொர்ப்பனத்திலொரு அந்த ணர்போல் வடிவுகொண்டு சொந்தமுடனந்த வர்த்தகர் களுக்கு சொர்ப்பனமாகவே காண்பித்தாரவர்சொ ப்பனமாகவே காண்பித்தார்

கஸ்தூரிரஙகேசர்சன்னிதியில் கள்ளன்சொத்தை யபகரித்து விற்பனைசெய்யவும் வந்திருக்கிறனென்றுய ந்தவர்த்தகரெல்லாம் கள்ளனென்றார்கள்

கண்ணைமுழித்துவந்த வியாபாரியும்கண்டது சொ ப்பனமென்றறிந்து ஆண்டவனுக்குநாம் தொண்டுசெய் வோமென்று வானந்தமாகவே சந்தோஷித்தான் வெகு வானந்தமாகவேசந்தோஷித்தான்

கச்சேரியாருக்குதெரியவைத்தான் கானிஸ்டேபில் களையழைத்துக்கொண்டான் கள்ளனைக்கண்டு,பிடித்துக் கொண்டான் காவலில்வைத்தடிக்கச்சொன்னனவன் கா வலில்வைத்தடிக்கச்சொன்னன்

6. தஙகப்பாட்டு இராகம்

ஒருடஜனடிக்க ஒருடஜனடிக்க வுயிரதுதுடிக்க யு ள்ளபடியுரைக்க உறுதிமொழி பெற்றுக்கொண்டார்கள் கள்ளவனுள்ளபடிசொல்லிவிட்டான் கள்ளவனுள்ளபடி சொல்லிவிட்டான்

அரிதானபம்பாயிலே அரிதாறுபம்பாயிலே இந்த

நீலரத்னம்கொண்டு அகப்பட்டானேகள்ளனென்று யடி த்தார்கள் தந்தியப்போ ஸ்ரீரஙகத்திலனைவரும்கொண்டா டவே ஸ்ரீரஙகத்திலனைவரும்கொண்டாடவே

வெகுநாளாய்கணக்கரை வெகுநாளாய்கணக்கரை பம்பாயிக்குபோகச்சொல்லி போலீசாரைகண்டுமஙகே அரஙகருடைய பூஷணஙகளின்னதென்றடயாளம் சொ ல்லுமென்றார் இன்னதென்றடயாளம் சொல்லுமென்றார்

கள்ளர்களை கூட்டிக்கொண்டு கள்ளர்களைகூட்டிக் கொண்டு கைக்குட்டைபூட்டிக்கொண்டு கனிஸ்டேபாகூ டவர வேகமுடன்றயிலேறியே கோட்டயில்வந்து விட் டார் போலீசிலேகோட்டயில்வந்துவிட்டார்போலீசிலே

7. அரிபாலோ என்ற இராகம்

கலெக்டராபீஸில் விசாரணை செய்தார் விசாரணைசெ ய்தார் கள்ளர்கள்சொத்துடன்வந்தஙகெசேர்ந்தார்கள்ள ர்கள்சொத்துடன்வந்தஙகெசேர்ந்தார்கள்

குற்றவாளியைக்கொண்டு கூட்டுக்குள்நிறுத்தி கூ ட்டுக்குள்நிறுத்தி கோர்ட்டார்முன்பாக விசாரணைசெய் தார் கோர்ட்டார்முன்பாகவிசாரணைசெய்தார்

தேவத்துரோகியான அரும்பாவியுனக்கு அரும்பா வியுனக்கு தெரிந்தது எவ்விதம் சனனதியெல்லாந்தெரி ந்தது எவ்விதம் சனனதியெல்லாம்

வேதவிமானத்தில் கன்னங்கள்வைக்க கன்னங்கள்வைக்க வழிகள்தெரிந்தது யெவ்விதஞ்சொல்லும்வழிகள்தெரிந்தது யெவ்விதஞ்சொல்லு

ஒருசானுள்ளொருகன்னவழியாலேகன்னவழியாலேயுள்ளேயிறங்கின வுபாயத்தைச்சொல்லு

அரங்கனூர்சொத்தெல்லாம் கொள்ளைகளடிக்க கொள்ளைகளடிக்கயாரார்கூட்டா ளியஞ்சாமல்சொல்லு ஆரார்கள்கூட்டாளியஞ்சாமல்சொல்லு

உள்ளரன்களில்லாமலே கொள்ளைகளடித்துகொள்ளைகளடித்துயபரமேவறின வுண்மையைச்சொல்லு உபரமேவறினவுண்மையைச்சொல்லு

8 (ஆண்டவன்மித்திர) என்றஇராகம்

வாதிகள் பிரதிவாதி வக்கீல்களகூடி விசாரணைசெய்யலானூர்உதாரணமாகவே மார்வடிக்கள் ளனுரைத்தான் தைரியமாயவனுரைத்தான் தைரியமாய்

முத்துக்கள் ரத்னங்கள் வியாபாரஞ்செவோம் மெத்தப்பிரசித்தியுடன் நாநாதேசத்துராஜாக்கள்கொள்வார் நவரத்தினபூஷணங்கள் எங்கள் நவரத்தினபூஷணங்கள்

பொல்லாதவேஷத்தால் குற்றங்கள்சாட்டி கள்ளர்களென்றுசொல்லி எங்களைகள்ளர்களென்று சொல்லிக்காவல்படுத்து தண்டனையெல்லாம் கடினமாய்ச்செய்தார்

கள்

அங்கங்கள்பதரவும் வுயிராதுதுடிக்கவும் யடித்ததைப்பொறுக்காமல்உயிரைக்காப்பாற்றதிருடினேமென்றோம்உண்மையாயெண்ணிவிட்டாரவர்கள்யுண்மையாயெண்ணிவிட்டார்

பம்பாயிலுள்ள வர்த்தகர்களெல்லாம் வெகுபேர்சாக்ஷியுண்டுநியாயாதிபதிகளே விசாரணைசெய்யுங்கள் நன்மைகிடைக்கவேண்டுமெங்களுக்கு நன்மைகிடைக்கவேண்டும்

கள்ளர்கள்கேசைவிசாரணை செய்தார் கலெக்டரப்போது அரங்கேசன் சன்னதியிலுள்ளபேர்களை அடங்கலும் கேழ்க்கலானார் அவர்களடங்கலும் கேழ்க்கலானார்

9 (நாராயணஹரி)என்ற இராகம்

அரங்கேசன்சன்னதியில் லர்ச்சகர்களெல்லாரையும் ஆண்டவந்தன் பூஷ்ணத்துக்கடையாளம்சொல்லுமென்னார்

பரிமளரங்கரன்றோ பரீக்ஷைகள்பார்க்கலாமே பூஷணத்துக்கடையாளம் புனுகுசட்டங்கள் வாசனையே

கௌஸ்துபரத்னத்திலேகல்லிரண்டுபொரிசலுண்டு கமலநீலகெம்பு பச்சைக்கணக்குகளின்னதென்றார் ·

பத்தரைமாத்துத்தங்க மெத்தனையேசொன்னால் உன்

டவனுடையசொத்துக்கள் போனதுஐம்பதுசேசென்றார்
கள்ளங்களில்லாமலே யுள்ளபடிக்குரைத்தார்கலெக்
டருமுநதிபாய்நம்பி கள்ளனுக்குத்தீப்புசெய்தார்

பரிமளரெங்கநக்குத் துரோகியைப் பன்னிரண்டு
டெஜனடித்துமூடனானபாவியென்று மூன்றுவருஷங்கள்
தெண்டித்தார்

கடுங்காவல்வைக்கச்சொன்னார்காவில்விலங்கைபோ
டச்சொன்னார் ஆண்டவனுடையசொத்துகளெல்லாமடங்க
லுஞ்சமர்ப்பித்தார்

10 (நானநனா) என்றஇராகம்

நானாநன்னானேநாரனரைத்தவிரவில்லை நானாணன்னா
ன வக்ஷஸ்தலத்திற்கழகாய்லக்ஷ்மிப தக்கம்பண்ணிபக்ஷ
முடன் சேஷாத்திரியய்யங்கார் பாங்காக சமர்ப்பித்தார்

ஐநூறுபவுனுள்ள வந்தமுள்ள சடாரியை விந்தை
யுனுன் நாட்டுக்கோட்டை செட்டிபண்ணி சமர்ப்பித்தார்

அபரஞ்சிதங்கமிருக்க ஆணிவைரகெம்புமிருக்க அ
ரங்கேசன்சொர்ப்பனத்தில் யாசகங்கள்கேட்டாரடி
லக்ஷாதிகாரிகளிருக்கபக்ஷமுள்ளபேரிருக்ககிரக்காரிசொ
த்தைப்போய் கிருபையுடன் கேட்டாரடி

தொண்டுசெய்யும்பேரிருக்க தொழுதேத்தும் ஞா
னிகளிருக்க வேடப்பெண் சவரியைப்போல் வந்தாளடி.

வடுக்ச்சி

ஆயிரம்ரூபாயைக்கொண்டு' அந்தமுடன்சமப்பிவித்
துவிந்தையுடன்லீலநாயகம்வேகமுடன்செய்யச்சொன்ன

11 (ஐபாமுருகேசா) என்ற இராகம் (ர்

அந்த முடன்நீலநாயகா மாங்கருக்குச்சாத்தவென்ற அ
மிர்துமொத்த முகூர்த்தம்வைத்து அமிர்தமொத்த முகூ
ர்த்தம்வைத்த அனைவருங்கொண்டாட அலங்காரகள் செ
ய்தாரற்புதங்கள்பாரும்

அந்தமுடன்கௌஸ்துவத்தையா னையின்பேரில்வை
த்துக்கொண்டு விந்தையுடனலங்காரமாய் விந்தையுடனல
ங்காரமாய்வீதிவலமாகவந்தார் வாருங்களடி பெண்களே
பாருங்களடி கண்மணிகளே

அந்தமுடனேசன்னதியை யலங்காரஞ்செய்யச்சொ
ன்னார் புஷ்பத்தினால் பந்தலிட்டார் புஷ்பத்தினால்பந்தலி
ட்டார் வெகுவிதமாய் சிங்காரித்தார் அலங்காரங்கள் செ
ய்தாராச்சரியமபாரும்

புன்னாகசம்பகமல்லிகையால் 'புஷ்பக்கொட்டகை
போடச்சொன்னார்புஷ்பக்கொட்டகைபோடச்சொன்னார்
கொடமல்லிகமுல்லைபுஷ்பக்குஞ்சலங்கள் கட்டிவைத்தா
ர்லங்காரங்கள் செய்தாராச்சரியம்பாரும்

பாக்குகுலைகள்தேக்குகுலைகள்பலவிதமாய்ப்பலதினுசு

செங்கரும்பு செவ்விளநீர் சேர்ந்ததொரு பிலாக்கனியும் மலங்காரங்கள் செய்தாராச்சரியம்பாரும்

தித்திக்கும்தேன்வாழை திகட்டுமந்தசெவ்வாழை மலைப்பழங்கள் பொந்தம்பழகள் முன்வரிசையலங்கரித் தார் யலங்காரங்கள் செய்தாராச்சரியம்பாரும்

பக்ஷமுடனேசெங்கருக்குலக்ஷதீபமேத்திவைத்தார் பன்னீருல்ஜலந்தெளிந்தார் பன்னீருல்ஜலந்தெளித்தார் பஞ்சவர்னகோலமிட்டார் யலங்காரங்கள் செய்தாராச்சரி யம்பாரும்

ஆணிமுத்துநவரத்தின வாபரணங்கொண்டுவந்தார் ரஙகருக்கும்நாச்சியாருக்கும் அரஙகருக்கும் நாச்சியாரு க்கு மலஙகாரஙகள் செய்யச்சொன்னார் வாருஙகளடிபெ ண்களே பாருஙகளடி கண்மணிகளே

12 (சுபத்திரைகல்யாண) இராகம்

அளுக்குப்பதக்கம் தளுக்குசரம் ஹாரங்கள் முத்து ரத்தினமும் காந்தியுள்பூமாஙகாமாலைகலிக்கத்துந்ரான்மு கம்மல்ஜிமிக்கிஜம்பசரம்கா துக்கழகாய்முருகுடனே(டி சு தர்ஜனமாலைஜெபமாலை ஜோடணையாக வலஙகரித்தார்

பொற்பூணலாளுலும் புஜவஙகியுதோள்வளையுமண் டலமளந்ததிருவடியி ற்கதண்டைசிலபுசாற்றிக்கொண் டார்

தங்கத்தகடுமீகாம்பரந் தாயார்பெருமாளுக் கலங்க
ரித்தற்புதமானாகிளிமாலையாண்டவனுக்குசமர்ப்பித்தார்

13 (சாரங்கமேனவாசெளந்திரமேனவா)என்றஇராகம்

பல்லவி

நீலநாயகஞ்சாத்திக். கொண்டாரே சாத்திக்கொண்டாரேநித்தியானந்தப்பிரபு ரெஙகேசன்

அநுபல்லவி

அஷ்டாதச வாத்தியங்கள்கோஷிக்க யரம்பைகளுர்வசிநடனங்கள்செய்ய தும்புருநாரதர்கீதஙகள்பாட துப்பமருமலர்சொரிய

மங்களமானந்த முகூர்த்தங்கள்வைத்து மகததுக்களெல்லாருஙகூடியேவந்து கனகமயரத்னகௌஸதுபஹாரத்தை கௌஸ்துப ஹாரத்தைகஸ்தூரிரெஙகருக்குக்கண்டத்தில் சமர்ப்பித்தார் (ட

சக்கரைமுப்பழம்பாலன்னமோடுசந்தோஷமாகவெமுதுகள்செய்தார் போஙகல்புளியோதரை அக்காரவீசனும் அக்காரவீசனும் போக்கியமாகவே வமுதுகள் செய்தாச

கண்டாயோதோழி விந்தகௌஸ்துபஹாரத்தை கண்களாயிரமிருந்தாலும் போதுமோ பார்த்தாயோதோழியிந்தப்பூபந்தழகை பூபந்தலழகைபார்மீதிலெவருக்கும் கண்டபேருண்டோ

கட்டுப்பள்ளி தன்னைவிட்டுக் கோவையுள் மகிழ்ந்த கஸ்தூரி ரெங்கருக்கு மங்களம் அட்டன்னாகை விட்டு அரங்கத்தில் மகிழ்ந்தார் அரங்கத்தில் மகிழ்ந்த ஆனந்தசொரூபருக்கு மங்களம் மங்களம்

ஸ்ரீரங்கநாதன் சன்னதியில்

திருட்டுப்போன கும்மி முற்றும்

O-1 85 MAN